பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

அன்பளிப்பு

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2026 மார்கழி 02 ஞாயிற்றுக்கிழமை (17-12-1995) **UTHAYAN** A Lively National Tamil Daily கதிர் 21

# ஈழத் தமிழர் போன்று போராட்டம்

# மலையக மக்களும் நடத்தும் நிலை!

## சென்னையில் தீவிர பாதுகாப்பு! "சாவ்" போட்டி நாளை ஆரம்பம்

சென்னை, டிச. 17

தீவிர பாதுகாப்புக்கு மத்தியில் ஏழாவது 'சாவ்' விளையாட்டுப் போட்டிகள் நாளை சென்னையில் ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் ஆரம்பமாகின்றன.

பிரதமர் நரசிம்மராவ் இப்போட்டிகளை அங்குரார்ப்பணம் செய்து வைப்பார்.

எதிர்வரும் 28 ஆம் திகதி வரை இப் போட்டிகள் நடைபெறும்.

பாகிஸ்தான், ஸ்ரீலங்கா உட்பட போட்டிகளில் பங்குபற்றும் ஏழு நாடுகளினதும் வீரர்களுக்கு தீவிர பாதுகாப்பு வழங்கப்படும் என பொலீஸ் அதிகாரி வோல்டர் தேவாரம் அறிவித்துள்ளார்.

எனினும் இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள் விளையாட்டுப் போட்டி சுமுகமாக நடைபெறுவதைப் பாதிக்கா என்று பாதுகாப்பு வட்டாரங்கள் குறிப்பிட்டன.

விளையாட்டு மைதானத்தில் 500 விசேட பொலீஸாரும் —

போட்டியில் பங்குபற்றும் வீரர்கள் தங்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)

### ஈழத் தமிழருக்கு ஆதரவாக

## தனக்குத் தானே நெருப்பு மூட்டி திருச்சியில் இளைஞர் தற்கொலை!

சென்னை, டிச. 17

ஈழத்தில் தமிழர்களை ஸ்ரீலங்காப் படைகள் படுகொலை செய்து கொண்டிருக்கும்போது —

சென்னையில் நாளை ஆரம்பமாகும் 'சாவ்' விளையாட்டுப் போட்டிகளில் ஸ்ரீலங்கா அணி பங்குபற்றுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருப்பதை ஆட்சேபித்து தமிழக இளைஞர் ஒருவர் தன்னைத் தானே தீ மூட்டி தற்கொலை செய்து கொண்டார்.

ஈழத் தமிழர்களுக்காக தாம் தன்னைத் தானே தீ மூட்டி தற்கொலை செய்து கொள்வதாக அவர் கூறினார்.

தெற்கு மாநிலமான தமிழகத்தின் தெற்கு நகரான திருச்சிராப்பள்ளியில் இச் சம்பவம் நேற்று இடம்பெற்றது.

சென்னையில் நாளை ஆரம்பமாகும் ''சாவ்'' விளையாட்டுப் போட்டிகளை —

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீலங்கா அணியை அனுமதித்ததை ஆட்சேபித்து நாளை ஆர்ப்பாட்டம்

### ம.தி.மு.க. ஏற்பாடு

லண்டன், டிச. 17

நாளை சென்னையில் ஆரம்பமாகும் தெற்காசிய (சாவ்) விளையாட்டுப் போட்டிகளில் ஸ்ரீலங்கா பங்குபற்றுவதை எதிர்த்து தமிழ் நாட்டில் மறுமலர்ச்சி தி. மு. க. கறுப்புக்கொடி காட்டி ஆர்ப்பாட்டம் நடத்தவிருக்கிறது.

விடுதலைப்புலிகளுக்கு எதிராக ஸ்ரீலங்கா அரசு நடத்தும் தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக —

விளையாட்டு விழா அங்குரார்ப்பண வேளையில் ஆர்ப்பாட்டம் செய்யப்போவதாக அக்கட்சி அறிவித்துள்ளது.

விளையாட்டுப் போட்டியின் தொடக்க விழா நடைபெறும் சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் மறுமலர்ச்சி தி. மு. க. தொண்டர்கள் தமது கட்சியின் பொதுச்செயலாளர் வை. கோபாலசாமி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடத்தவிருப்பதாக அறிவிக்கப்பட்டது. (உ-3-6)

# புதிதாக 11,500 இளைஞர் இராணுவத்துக்கு சேர்ப்பு

### நேர்முகப் பரீட்சையில் தெரிவு

கொழும்பு, டிச. 17

ஸ்ரீலங்கா இராணுவத்துக்கு புதிதாக 11 ஆயிரத்து ஐநூறு பேர் தெரிவுசெய்யப்பட்டிருப்பதாக இராணுவ தலைமையக அதிகாரியான மேஜர் ஜெனரல் கெமுனு குலதுங்கவை மேற்கோள் காட்டி ''லங்காதீப'' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இராணுவத்துக்கு புதிதாக பத்தாயிரம் பேரைச் சேர்த்துக் கொள்வதற்கான திட்டத்தின் கீழ் நேர்முகப் பரீட்சைகள் கடந்த 4ஆம் திகதி முதல் தென்னிலங்கையில் பல்வேறு இடங்களிலும் நடைபெற்றன என்பது தெரிந்ததே.

இந்த நேர்முகப் பரீட்சை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## எச்சரிக்கின்றார் அமைச்சர் தொண்டா

கொழும்பு, டிசம்பர் 17

**மலையக மக்களுக்குரிய உரிமைகள் வழங்கப்படாவிட்டால், வடக்கு - கிழக்குத் தமிழர்களைப் போல் மலையகத் தமிழரும் தீவிரப் போராட்டத்தை மேற்கொள்ளும் நிலை வரும் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான சௌமியமூர்த்தி தொண்டமான் எச்சரித்திருக்கின்றார்.**

வடக்கு - கிழக்கில் ஈழத் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தில் பெரும் கஷ்டங்களை எதிர்கொண்டிருக்கும் ஸ்ரீலங்கா அரசு, மலையகத் தமிழர்களால் புதிய நெருக்கடிக்கு முகம் கொடுக்க வேண்டி நேரிடும் என தமிழ் அரசியல் தலைவர்களை

(6 ஆம் பக்கம் பார்க்க)

### புலிகளின் பிடி இறுகுகின்றது

## கிழக்கில் தன் அதிகாரத்தை இழக்கிறது ஸ்ரீலங்கா அரசு!

கொழும்பு, டிச. 17

கிழக்கு மாகாணத்தின் பெரும் பகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்ததை அடுத்து —

அரச திணைக்களங்கள் மற்றும் பாதுகாப்பு படைகள் ஆகியவற்றின் அதிகாரிகள் கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் இடையில் போக்குவரத்தில் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டிருப் பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

திருமலையில் இருந்து மட்டக்களப்புக்குச் செல்ல எடுத்த முயற்சிகள் பல முறை தோல்வியுற்றதாக கத்தோலிக்க மத குருவான வண. ஜோர்ஜ் திஸநாயக்கா தெரிவித்தார்.

வடபகுதி மீதான தாக்குதலுக்காக கிழக்கு மாகாணத்திலிருந்த பெரும் எண்ணிக்கையான படையினரை ஸ்ரீலங்கா அரசு வாபஸ் பெற்று வடக்

(6ஆம் பக்கம் பார்க்க)

## பரிவாரங்களுடன் சிறிபால யாழ்ப்பாணம் சென்றார்!

யாழ். குடாநாட்டில் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட பிரதேசங்களில் புனர்வாழ்வுப் பணிகளை மேற்பார்வை செய்வதற்கான செயலணிக் குழுவின் அங்கத்தவர்கள் நேற்று யாழ்ப்பாணம் சென்றதாக அறிவிக்கப்பட்டது.

வீடமைப்பு, நிர்மாணத் துறை, பொது வசதிகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையிலான இக் குழுவில் அமைச்சின் செயலாடர் எஸ்.என்.ஜி. சேனரத்ன உட்பட 9 பேர் உள்ளனர்.

இந்தக் குழுவினர் பலாலியில் படை அதிகாரிகளையும் சந்தித்துப் பேசியதாக அறிவிக்கப்பட்டது. (உ-3)

### கொழும்பில் புலிகளால்

## தாக்கப்படக் கூடிய இடங்களில் பாதுகாப்பு

கொழும்பு, டிச 17

கொழும்பில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களுக்கு இலக்காகக் கூடும் என அடையாளம் காணப்பட்டுள்ள பகுதிகளுக்கு தீவிர பாதுகாப்பு வழங்கப்பட்டிருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தாம் கடத்திய வாகனங்களில் வெடி குண்டுகளைப் பொருத்தி அவற்றின் மூலம் கொழும்பில் கேந்திர நிலையங்களைத் தாக்க புலிகள் திட்டமிடுவதாக பாதுகாப்பு வட்டாரங்கள் சந்தேகம் தெரிவித்துள்ளன.

களனிப் பாலம், மின் உற்பத்தி நிலையங்கள், பொலீஸ் நிலையங்கள், முப்படைகளின் தலைமையலுவலகங்கள் போன்றவை புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகக் கூடும் என பாதுகாப்பு வட்டாரங்கள் எதிர்பார்ப்பதாகக் கூறப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படையினரின் "பங்கர்" ஒன்றில் தடை செய்யப்பட்ட பொருள்கள்

கொழும்பு, டிச. 17

வவுனியா — மன்னார் வீதியில் உள்ள சாளம்பைக்குளம் பகுதியில் படையினரால் கைவிடப்பட்டிருந்த ''பங்கர்'' ஒன்றில் இருந்து வவுனியாப் பொலீஸார் ரூ. 15 லட்சம் பெறுமதியான தடை செய்யப்பட்ட பொருள்களைக் கண்டு பிடித்தனர்.

வடபகுதிக்கு எடுத்துச் செல்வதற்கு தடை செய்யப்பட்ட வீடியோ டெக்குகள், பட்டறிகள், பிலிம் றோல்கள், தின்னர் ஆகியவை இவற்றுள் அடங்கும்.

பெட்டிகளில் நன்கு பொதி செய்யப்பட்டு, சாக்குகளில் இவை நன்கு சுட்டி வைக்கப்பட்டிருந்தன என்று கூறப்படுகிறது.

இந்த காவலரண் பகுதியை சுற்றிப் பார்வையிடச் சென்ற வவுனியா உதவி பொலீஸ் சுப்பிரிண்டன் தலைமையிலான கோஷ்டியினரிடம் இப்பொருள்கள் சிக்கின. (இ)

# இறைச்சிக்கு நல்லின ஆடு, மாடுகள் வெட்டுவதற்கு முற்றாக தடைவிதிப்பு

சாவகச்சேரி, டிச. 17

நல்லின ஆடு, மாடுகளை இறைச்சிக்காக வெட்டுவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது என தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அறிவித்துள்ளது.

இது சம்பந்தமாக விலங்கு வேளாண்சேவையினர் நேற்று விடுத்த செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது :-

போர்க்கால சூழலில் இடம் பெயர்ந்து உள்ளவர்கள்களின் நல்லின ஆடு, மாடுகளை குறைந்த விலையில் வாங்குவதும் இறைச்சிக்காக வெட்டுவதும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

வன்னி பெருநிலப் பரப்பில் கால்நடை அபிவிருத்திகளை மேற்கொள்வதற்காக வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளிலுள்ள கால்நடைகளை பெருநிலப் பரப்புக்கு படகுகள் மூலம் மாற்றிக் கொடுப்பதற்கு பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஒழுங்குகள் செய்துள்ளது.

எனவே மேற்கொண்டு நல்லின ஆடு, மாடுகள் இறைச்சிக்காக வெட்டப்படுவது கண்டுபிடிக்கப்பட்டால் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

தவிர்க்க முடியாத தேவை கருதி கால்நடைகளை விற்க விரும்புவோர் எதிர்வரும் 20 ஆம்திகதியிலிருந்து வெண்மை விலங்கு வேளாண்மை நிலையங்களுடன் தொடர்புகொள்ளலாம். — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் —

இடம் பெயர்ந்து வடமராட்சி, தென்மராட்சிப் பிரதேசங்களில் கால்நடைகளை வளர்ப்போர் அவற்றை வன்னிப் பெருநிலப் பரப்புக்கு கொண்டு சென்று வளர்க்க விரும்பின் அவர்களுக்கு சலுகை அடிப்படையிலான படகுச் சேவை வசதி செய்து கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகையோர் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கொடிகாமம் கோட்டச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர். (உ-7)


## உடன் சந்திக்கவும்

யாழ்ப்பாணம் கலியுகவரதன் விற்பனை நிலையத்தில் கணக்காய்வாளராக கடமையாற்றிய

தனபாலசிங்கம் மானிப்பாய்

தயவுசெய்து டச்சு வீதி, சாவகச்சேரியில் இயங்கும் கலியுகவரதன் விற்பனை நிலையத்தில் தொடர்பு கொள்ளவும்.

[39640[



## வலி கிழக்கு தென் பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

நீர்வேலி

எமது சங்க பாவனையாளர் கவனத்திற்கு,

உலர் உணவு அட்டைகள்

தங்களுக்கு வழங்கப்பட்ட உலர் உணவு அட்டை வேறு சங்கங்களில் உணவுப் பொருள்களைப் பெற பதிவு செய்யப்பட்டிருப்பின், எமது சங்கக் கிளை நிலையங்களில் பொருள்களைப்பெற விரும்பின் உங்கள் வசிப்பிடங்களுக்கு அருகேயுள்ள எமது சங்கக் கிளைகளில் உலர் உணவு அட்டையை சமர்ப்பித்து பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

பொது முகாமையாளர்

மீசாலை.
1995 - 12 - 13. [சி-3054]



வலி- கிழக்கு தென்பகுதி

## பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

நீர்வேலி

## அறிவித்தல்

பணியாளர் கவனத்திற்கு,

08 - 11 - 95 தொடக்கம் எமது சங்கக் காரியாலயம் புத்தூர் சந்தி, மீசாலையில் இயங்கி வருகிறது. லீவு அனுமதி பெறாமலும், விண்ணப்பிக்காமலும், கடமைக்கு சமுகமளிக்காமலும் நிற்கும் நிரந்தர பணியாளர்கள் 10 - 01 - 1996 ஆம் திகதிக்கு முன் கடமைக்கு சமுகம் தரும்படி அழைக்கப்படுகின்றனர். குறித்த தினத்திற்கு பின்னரும் சமுகமளிக்காதிருப்பின் கூ. வே. ஆ. குழு கட்டளைச்சட்டப் பிரகாரம் தாமாகவே பதவியை வெறிதாக்கியதாக கருதப்படுவர்.

பொது முகாமையாளர்

மீசாலை சந்தி,
மீசாலை வடக்கு.
1995 - 12 - 1 2 )சி/3355)


## இன்று திறந்திருக்கும்

சாவகச்சேரி, டிச. 17

யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கங்களின் அனைத்துக் கிளைகளும் பாவனையாளர்களின் நலன்கருதி இன்று ஞாயிற்றுக்கிழமை முழுநேரமும் திறந்திருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. [உ-30]

## மிதிவெடிகளில் சிக்கும் படையினர்

சாவகச்சேரி, டிச. 17

வலிகாமத்தின் கிழக்கு மற்றும் வடக்குப் பகுதிகளில் நிலைகொண்டுள்ள ஸ்ரீலங்கா இராணுவத்தினர் தமது நிலைகளை விஸ்தரிப்பதற்காக ரோந்தில் ஈடுபடும் சமயங்களில் விடுதலைப் புலிகளின் மிதிவெடியில் சிக்கி காயமடைந்து வருவதாக ஸ்ரீலங்கா இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டும் செய்திகள் தெரிவிப்பதாக புலிகளின் குரல் தெரிவித்தது. (உ-7)

## அதிபர் கூட்டம்

தென்மராட்சி, டிச. 17

பளைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு பளை மத்திய கல்லூரியில் நடைபெறும் என கல்விக் கோட்ட உதவிப் பணிப்பாளர் திரு. ப. அரியரத்தினம் அறிவித்துள்ளார். (உ-117)

## வயிற்றோட்ட நோய் தீவிரம்

சாவகச்சேரி, டிச. 17

நேற்று முன்தினம் மட்டும் சாவகச்சேரி வைத்தியசாலை வார்ட்டுகளில் வயிற்றோட்டம் காரணமாக 10 பேர் அனுமதிக்கப்பட்டனர். இதனைவிட வெளி நோயாளர் [illegible] சிகிச்சை பெற்றுள்ளார்கள். (இ-13)

வடமராட்சி, தென்மராட்சியில்

# ஆண்டு 5 வரை வகுப்புகள் ஜனவரி 1 இல் ஆரம்பிக்கும்

சாவகச்சேரி, டிச, 17

தென்மராட்சி, மற்றும் பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி கோட்டங்களிலுள்ள பாடசாலைகளில் ஐந்தாம் ஆண்டு வரையான வகுப்புகளை எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் தொடக்கம் ஆரம்பிக்கப்பதற்கான முயற்சிகளை வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

இடவசதி, ஆசிரியர் வளம் ஆகியவற்றுக்கு ஏற்ப பாடசாலைகள் இயங்கும் நேரங்களை ஒழுங்கு செய்வதற்கும் —

இடம்பெயர்ந்தோர் உள்ள பாடசாலைகளுக்கு மாற்று வழிகளைக் கையாள்வதற்கும் —

கல்விப் பணிப்பாளர்கள், கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் அதிபர்கள் உத்தேசித்துள்ளனர் எனத்தெரியவருகின்றது.

பாடசாலைகளில் ஏனைய வகுப்புகளை நடத்துவதற்கும் சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடி பின்னர் முடிவு எடுப்பது எனத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

# 1996 இல் பாடசாலைகள் 210 நாள்கள் இயங்கும்

கொழும்பு, டிச. 17

1996 ஆம் ஆண்டு பாடசாலைகள் நடைபெறும் நாள்கள் 210 ஆக அதிகரிக்கப்பட்டிருக்கின்றது என கல்வி, உயர்கல்வி அமைச்சு அறிவித்திருக்கின்றது.

இதுவரை பாடசாலைகள் வருடத்தில் 192 நாள்கள் மட்டுமே நடைபெற்று வந்தன.

புதிய அறிவிப்புக்கு அமைய அடுத்த ஆண்டில் தமிழ் — சிங்களப் பாடசாலைகளின் தவணை விவரம் வருமாறு:-

★ முதலாம் தவணை— ஜனவரி 1 முதல் ஏப்ரல் 4

★ இரண்டாம் தவணை— ஏப்ரல் 22 முதல் ஓகஸ்ட் 2

★ மூன்றாம் தவணை — ஓகஸ்ட் 26முதல் டிசம்பர் 12

(உ-9)

'உ' அட்டை வைத்திருப்போரை

# பொருள்கள் முழுவதையும் வாங்க வற்புறுத்த முடியாது

சாவகச்சேரி, டிச. 17

'உ' பங்கீட்டு அட்டை வைத்திருக்கும் குடும்பங்கள் தற்போது வழங்கப்பட்டு வரும் உலர் உணவு நிவாரணத்தில் — விநியோகிக்கப்படும் பொருள்களில் — தாம் விரும்பும் பொருள்களை மட்டும் பெற்றுக்கொள்ள முடியும் என்று யாழ். செயலகப் புனர்வாழ்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கைக்கு ஏற்ப ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பொருள்களில் முழுவதையும் பெற வேண்டும் என சில ப.நோ. கூ. சங்கங்கள் தெரிவிப்பதாக கிடைத்த முறைப்பாட்டையடுத்தே—

கொள்வனவு செய்வோர் விரும்பிய பொருள்களை மட்டும் வழங்குமாறு பணிப்புரை

( 6ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கிற்கான பொருள்கள்: குறைப்பதற்கு அரசு முடிவு?

யாழ்ப்பாணத்துக்கு மாதாந்தம் அனுப்படும் அத்தியாவசியப் பொருள்களின் அளவை 2 ஆயிரம் தொன்னால் ஸ்ரீலங்கா அரசு குறைக்கவுள்ளது.

ஸ்ரீலங்கா அரசின் வடபகுதிக்குப் பொறுப்பான புனர்வாழ்வு இணைப்பாளர் சேனரத்தின இதனைத் தெரிவித்ததாக ''புலிகளின் குரல்'' வானொலி அறிவித்தது.


## 31 ஆம் நாள் நினைவலைகளும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு: 12-03-1950 உதிர்வு: 17-11-1995

அமரர்

## செல்லையா தருமராசா

(வன்னியர் கோவிலடி, வயாவிளான்)

வந்தனைகள் செய்தும்மை வணங்கி நின்று
வாயார நின்புகழைப் பாடுகின்றோம்
விந்தைமிகு செய்திகளை வியம்பி விட்டு
விண்ணாடு சென்றிட்ட வேளைதானும்
சிந்தனையில் இருந்தின்னும் செல்லா நின்று
சேர்ந்திட்டீர் இறைபாதம் நிசமாமென்று
(ஞான) சுந்தரச் சுடரேற்றி தொழுது நாளும்
தூமலர்கள் பாதமலர் சூடினோமே.

இன்று (17-12-95) மீசாலை வடக்கில் அந்தியேட்டி நிகழ்வுகள் நிகழவிருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கிறோம்.

நீங்காத நினைவுடன்
மனைவி, பிள்ளைகள்

கற்கண்டு, ''தெருவாரம்''
மீசாலை வடக்கு, மீசாலை. [39534]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து

# ஐ. தே. க. வின் நிலைப்பாடு என்ன?

## இன்றைய மாநாட்டில் வெளியிடப்படலாம்

கொழும்பு, டிச. 17

ஐக்கிய தேசியக் கட்சியின் 41 ஆவது வருடாந்த மாநாடு இன்று ஞாயிற்றுக்கிழமை கோட்டே ஸ்ரீ ஜெயவர்த்தன புரவில் உள்ள ஐ. தே. க. தலைமையகத்தில் நடைபெற உள்ளது.

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன் வைத்திருக்கும் அதிகாரப்பரவலாக்கல் யோசனைகள் குறித்து இதுவரை திட்டவட்டமாக தனது நிலைப்பாட்டை வெளியிடாமல் இருந்து வரும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி, இனப் பிரச்சினை தீர்வுக்கான முயற்சிகளுக்கு அதனால் வழங்கப்படக் கூடியசாத்தியமானபங்களிப்பு குறித்து நிலைப்பாடு எதனையும் வெளியிடலாம் என்று அவதானிகள் எதிர்பார்க்கின்றனர் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

இன்றைய மாநாட்டில் ஐ. தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கா கொள்கை அறிக்கை ஒன்றை விடுப்பார்.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகள் மற்றும் இன நெருக்கடிக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான பிரயத்தனங்கள் குறித்து மேலோட்டமாகவாவது தனது கட்சியின் நிலைப்பாட்டை அவர் கூறுவார் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் எந்த ஓர் அதிகாரப் பரவலாக்கல் யோசனையும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவின்றி மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைப் பலத்துடன் நிறைவேற்ற முடியாது என்ற நிலைப்பாடும் ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்களில் மேலோங்கி நிற்கின்றது என்று கூறப்படுகிறது

(இ)

## தாஜ்மஹாலுக்கு அருகே உள்ள

## 104 தொழிற்சாலைகளை மூடிவிடும்படி உத்தரவு

புதுடில்லி, டிச. 17

உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மஹாலுக்குச் சமீபமாக உள்ள 104 தொழிற்சாலைகளை இரண்டு வாரங்களுக்குள் மூடி விடுமாறு அல்லது அவற்றை வேறு இடங்களுக்கு மாற்றுமாறு இந்திய சுற்றாடல் அமைச்சர் ராஜேஷ் பைலட் கடந்த வியாழக்கிழமை உத்தரவிட்டார்.

தாஜ்மஹால் அமைந்துள்ள அக்ரா நகரில் உள்ள தொழிற்சாலைகளில் இருந்து வெளிவரும் புகை உட்பட கழிவுப் பொருள்களால் தாஜ்மஹாலின் பளிங்குக் கற்கள் நிறம் மங்கி வருகின்றன.

இதனைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்ற உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை அடுத்தே அமைச்சர் மேற்கண்ட உத்தரவை விடுத்தார்.

தாஜமஹாலுக்கு சமீபமாக உள்ள 508 தொழிற்சாலைகளில் 404 தொழிற்சாலைகளில் சுற்றாடல் மாசுபடுவதை கட்டுப்படுத்தும் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. எஞ்சிய 104 தொழிற்சாலைகளையே மூடும்படி அல்லது வேறு இடத்துக்கு மாற்றும் படி உத்தரவிடப்பட்டுள்ளது.

தாஜ்மகாலின் சுற்றாடல் மாசுபடுவதைத் தடுப்பதற்காக தாஜ்மகால் அமைந்துள்ள பகுதிகளில் ஒரு லட்சம் மரங்கள் நடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ)

# கொழும்பு நீதிமன்றில் வெடிகுண்டுப் புரளி!

கொழும்பு, டிச. 17

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வெடிகுண்டு வைக்கப் பட்டிருப்பதாக தொலைபேசியில் கிடைத்த அனாமதேய தகவல் ஒன்றைத் தொடர்ந்து அங்கு பெரும் பதற்றம் நிலவியது.

உடனடியாக குண்டுகளை செயல் இழக்கச் செய்யும் இராணுவத்தினரும்—

பொலீஸ் மோப்ப நாய்களுடன் பொலீஸாரும்விரைந்து வந்தனர்.

காலல 9.00 மணிமுதல் நீதிபதிகளின் அறைகள் உட்பட பல்வேறு பகுதிகளிலும் அவர்கள் தேடுதல் நடத்திய போதிலும் எதனையும் கண்டு பிடிக்க முடியவில்லை.

பாதுகாப்புக் கருதி மேல் நீதிமன்றத்தின் இடது பக்க வாசல் கடந்த பல நாள்களாக மூடப்பட்டுள்ளது. முன் அனுமதி பெறப்பட்ட வாகனங்கள் மட்டுமே உள்ளே அனுமதிக்கப் படுகின்றன.

பொதுமக்கள் வேறு பாதை வழியாகவே உள்ளே செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். [இ]

## வீதியில் கேட்டவை....

சரசக்கா:
''இனிப் போகத்தேவையில்லை!''
சின்னக்கா:
என்ன சரசக்கா புதிர் போடுகிறீர்கள்?

ச: இனிப் போகத் தேவையில்லையாம்.
எல்லாரும் சொல்லுகினம்.
சி: எங்கடை முருகதாஸ் ஐயாவும் சொன்னவர்.
ச: அக்கா! கேட்க நல்லாய்த்தான் இருக்கு.
சி: ஆனால் நீ சொல்லுறது உண்மையில் நடக்க வேணுமே என்றுதான் கவலையாய் இருக்கு.
ச; உனக்கு எல்லாத்துக்கும் கவலைதான்
சி: இல்லை அக்கா, நாளைக்கு ஒரு ஷெல் வந்து சந்தியிலை வெடிச்சா, உனக்கு கதை சொல்லுகிறவை, உன்னை தேடாயினம்; முதலில் கிளாலிக் கரையில் இடம் பிடிப்பினம்.
ச: என்னடி! குண்டைத் தூக்கிப் போடுகிறாய். இன்றும் ஷெல் அடிப்பான்களோடி?
சி: ஏன் இப்ப ஷெல் அடிக்கவில்லையா?
வடமராட்சியில் தினமும் ஷெல் அடி - பேப்பர் பார்ப்பதில்லையோ தெரியாதே? முந்த நாள் தென்மராட்சியில் ஷெல்கள் விழந்தது.
ச! சாவகச்சேரியில் நிம்மதியாய் இருக்குறோமோ இல்லை?
சி: இப்ப என்ன சண்டை முடிந்ததா? ஆமிக்காறன் கொஞ்சம் களைப்பாறி இழப்புகளைக் கணக்குப் பார்க்கின்றான் — இன்னம் அம்மையாருக்கு கணக்கு கொடுக்கவில்லையாம்.
ச: அப்ப என்னத்தைக் கண்டு சனங்கள் கதைக்கினம்?
சி: அவையோ! எங்கடை சனங்களோ?
காகமானது கோடி கூடி நின்றாலும்
ஒரு கல்லின்முன் எதிர் நிற்குமோ?
ஒரு ஷெல் விழ்ந்து வெடித்தால் போதும்
எங்கடை சனத்துக்கு...—

— என். ஸி

## கிணறுகளுக்கு குளோரின் வில்லைகள்

சாவகச்சேரி, டிச. 17

சுகாதாரத் திணைக்களத்துக்கு ''ஒக்ஸ்பாம்'' நிறுவனம் குளோரின் வில்லைகளை வழங்கியுள்ளது

1000 கலன் தொடக்கம் 2000 கலன் வரையுள்ள நீர் கொண்ட கிணறுகளுக்கே இவற்றைப் பயன்படுத்த முடியும் என்றும் —

இந்த வில்லைகள் தேவைப் படுவோர் சாவகச்சேரி நகர சுகாதாரப் பரிசோதகர் எஸ். கிளின்ரஸ்சுடன் தொடர்பு கொள்ளுமாறும்— கோரப்பட்டுள்ளது. (இ-3)

## இலையான் ஒழிப்பு நடவடிக்கை

சாவகச்சேரி, டிச. 17

தென்மராட்சியில் வயிற்றோட்ட நோய்க்கு பிரதான காரணியாக இருந்து வரும் இலையான் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த மருந்து தெளிக்கும் வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மருந்தை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு நகர சபைக்கு வழங்கி உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-13)

## நடமாடும் வைத்திய சேவை

கொழும்பு, டிச. 17

வன்னியில் தங்கியுள்ள இடம் பெயர்ந்தவர்களுக்குத் தேவையான வைத்திய உதவிகளை வழங்க நடமாடும் வைத்திய சேவையை செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழு ஆரம்பித்துள்ளது.

முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் பகுதியில் உள்ளவர்களுக்கு [illegible] வைத்திய சிகிச்சையை அளிக்கும் வகையில் இந்த சேவை நடத்தப்படுகிறது. (இ-3)

## விளக்கேற்றும் நேரம் புறப்பட்டோம்.

-- புதுவை இரத்தினதுரை

இன்னும் ஆயிரம் வருடங்களுக்குப் பின்னர்
எம் மண்ணிலிருந்து வாழப்போகும்;
இல்லை... ஆளப்போகும்,
இளைய தலைமுறைக்கு... இது.
உம்மை அரியணையமர்த்த
''இருபதாம் நூற்றாண்டுக்கு'' மங்களம் பாடும் வயதில்
எம் மண் கொடுத்த விலையிருக்கே
அது பெரிது.
எல்லாவற்றையும் எழுத்திற் பொறிக்க முடியாது.
வார்த்தைகளுக்குள்ளே அவை வந்தும் குந்தாது.

எப்படி எடுத்து விரித்தாலும்
அளந்தறியாத ''துயர நிலாவரை''
மொழிபெயர்ப்புக் கவிதையைப் போல
மூலத்தின் முழுமையும் முகம் காட்டாது.
நாங்கள் சுமந்த துன்பச் சுமையை
உங்கள் தோளறியாது.
அன்றடித்த எங்கள் இதயத் துடிப்பை
காலம் கடந்தெவரும் கணக்கெடுக்கமுடியாது.
ஆயிரம் வருடங்கள் கழிந்து
ஆருக்கிது புரியப்போகிறது?
கல்லடித்த வேதனை காலுக்கே தெரியும்
அது கைகளுக்கு விளங்காது.
பிரசவ வேதனை புருஷனுக்குப் புரியாது
குத்திய வயிறுக்கே கொடுமை தெரியும்.
ஒருநாள்;
கருத்தரித்த மேகங்கள் சூரியனை மறைக்க
மாரிமழை பொழியும் ஐப்பசி மாதம்
30 - 10 - 1995 அன்று.
திங்கட்கிழமை.
வெய்யோன் படுவான்திசை வாய்க்குள்
இரையாகும் வேளை,
சந்தியா நேரம்.
ஐந்து மணி.
''பேய்கள்'' வருவதாகப் பேசப்பட்டது.
''சிங்களப் பிசாசுகள்'' எம்நிலம் புகுந்து
கோரப்பசிக்குக் குடிநிலங்களை விழுங்கியபடி,
புத்தூர்,
சிறுப்பிட்டி,
நீர்வேலி,
கோப்பாய் என்று விழுங்கிவிட்டு
இருபாலைப் பக்கம் எழுவதாய் அறிந்தோம்.
பேய்கள் ஏவிய எறிகணைகள்
கூவிவந்து
ஊருக்குள் உயிர்குடிக்கத் தொடங்கின.
நின்று நிதானிக்க நேரமிருக்கவில்லை.
அகப்பட்டதை அள்ளிக்கொண்டு
ஆண்டாண்டு காலம் பற்றிப்படர்ந்த
சொந்தத்தைப் பிரிந்தோம்.
ஊர்வெள்ளம் கூடி ஒரு குளத்தில் நிறைவது போல்
''வலிகாமம்'' ஓடிவந்து
''செம்மணி''யிற் திரண்டது.
பொழுது கருகத் தொடங்கியதும்,
''முத்திரைச்சந்தை''க்கு மூச்சுத் திணறியது.
செம்மணித் தெருவில்
எடுத்தகால் வைக்க இடமின்றி நின்றோம்.
பின், ஊர்ந்தோம்.
இட்டகாலுக்கும், எடுத்தகாலுக்குமிடையில்
இரண்டங்குல வெளியில்
நாங்கள் நடந்தோம்.
இல்லை... மெல்ல நகர்ந்தோம்.
பத்து மைல் நீளத்துக்குப் பாம்பென நெளிந்தது
சனத்திரளின் வரிசை.
தரவைக் கடலின் மேலே... அவலக்குரலெழுப்பி
''ஆட்காட்டிகள்'' எமக்காகக் கத்தின.
முன்னிலவு நெடுமூச்செறிந்தது
சின்ன வெளிச்சம் சிந்தியது.
கூதற்காற்றும் குமுறியது.
மழைமேகம் விழி பனித்து,
சொட்டுச் சொட்டாகத் தோளில் விழுந்தது.
நாங்கள் நடந்தோம்.
உள்ளே சின்ன உயிர் சுமந்து
வயிறூதிய தாயாரும் வரிசையில்;
பக்கவாதத்தால் படுக்கையிற் கிடந்த
பெற்றோரைக் காவிகளும் வரிசையில்;
தள்ளாத வயதில் தடுமாறிய
மூப்படைந்த முதியோர்,
பூப்படைந்த குருதிப் பெருக்குடன்
புதிய குமர்கள்,
கைத்தடியுடன் காலிழந்தோர்,
வெள்ளைப் பிரம்புடன் விழியிழந்தோர்,
இன்னும் உயிர்காக்கத் துடித்தோரெல்லாம்
அதே வரிசையில் அணிவகுத்திருந்தோம்.
கையிற் சுமையுடன், தலையிற் சுமையுடன்,
நெஞ்சிற் கனத்த துன்பச் சுமையுடன்
நாவற்குழிப் பாலமேறி நகர்ந்தோம். [வளரும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### தேவை

சூரிய மின்கலம் (SOLAR) வைத்திருப்பவர் யாராவது விற்க விரும்பினால் எம்முடன் தொடர்பு கொள்ளவும். க. கிருபானந்தக் குருக்கள் கிராம்புவில், பருத்தித்துறை வீதி, சாவகச்சேரி. (39525)

### ஆங்கிலக்கல்வி

சுலபமான முறையில் ஆங்கிலம் பேசப்பயில ஆசிரியர் ந. விக்கினேஸ்வரன் C/o R. நடராசா மணல் வீதி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி (சோமஸ்கந்தா நூல் நிலையம் அருகில்) (39638)


# யாழ். நகரில் கொடி ஏற்றியதைவிட அரசு ஈட்டிய வெற்றி எதுவுமில்லை

## அமைச்சர் அஷ்ரப் இப்படிச் சொல்கிறார்

கொழும்பு, டிச. 17

யாழ்ப்பாணத்தில் சிங்கக் கொடி ஏற்றி வைக்கப்பட்டு விட்டதால் நாட்டில் யுத்தம் முடிந்துவிட்டது என்று எவரும் நினைக்கக்கூடாது. 17 வருடகாலமாக ஐக்கிய தேசியக் கட்சியினால் சாதிக்க முடியாது போனதை இன்றைய அரசு கொடி ஏற்றிச் சாதித்துள்ளது. இதனைத் தவிர வேறு எந்த வெற்றியும் எமக்கு ஏற்படவில்லை.

துறைமுகங்கள், கப்பற்றுறை, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாத்தறையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ்ப்பாணத்தில் கொடியை ஏற்றியதை, தமது பூரண வெற்றியாக நினைத்து எவரும் தலைக்கனம் கொள்ளக்கூடாது. அரசியல் தீர்வின் மூலமே எமக்கு பூரணவெற்றி ஏற்படும். இதனை கருத்தில் கொண்டு மக்கள் செயற்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

விடுதலைப் புலிகள் திருகோணமலையில் வாழ்ந்த சிங்களவர்களைத் துரத்தி அனாதைகளாக்கி உள்ளனர். அவர்களை நாம் மீளக் குடியேற்றுவோம் இனவாதப் பிரச்சினைக்கு தீர்வு ஏற்பட்டதும் வடக்கு - கிழக்கு மாகாணங்களை புனரமைப்புச் செய்வதற்கு அரசு உறுதி பூண்டுள்ளது என்றும் அவர் சொன்னார்.

(இ)

# பனை, தென்னைவள கூட். சங்கத்தின் வலிகாமப் பிரிவு வன்னிக்கு நகர்வு

சாவகச்சேரி, டிச. 17

பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் வலிகாமம் கொத்தணியின் கைத்தொழில், உற்பத்தி பிரிவுகள் வன்னிக்கு இடம் பெயர்கின்றன.

பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்துவம் பெறும் சீவல் தொழிலாளர்களுக்கு புதுக்குடியிருப்பு, கண்டாவளை, மாங்குளம் பகுதியில் வேலை வாய்ப்புக் கிடைக்கும் நிலை ஏற்பட்டிருப்பதாலேயே இந்தப் பிரிவுகளும் வன்னிக்கு செல்கின்றன.

வன்னியில் ஏற்கனவே செயற்படும் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களுடன் இணைந்து இந்தச் சங்கங்களும் செயற்படும்.

வன்னியில் பாவிக்கப்படாது இருந்த பனை, தென்னை வளங்களை பாவிக்கவும் —

அதன் மூலம் அந்த தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கவும் — நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் கொத்தணியுடன் வடமராட்சி கொத்தணியின் ஒரு பகுதியும் வன்னிக்கு நகரவிருக்கின்றது.

தற்போது வன்னிக்கு இடம் பெயர்ந்த, இடம்பெயராத சீவல் தொழிலாளர்கள் பற்றிய ஆய்வு ஒன்றும் மேற்கொள்ளப்படவிருக்கிறது.

இந்த ஆய்வில் ஈடுபடுத்தப் படவிருப்போருக்கு விசேட பயிற்சி வகுப்பு ஒன்று நேற்று நடத்தப்பட்டது.

## வங்கி வாடிக்கையாளர் சங்கம்

யாழ். மாவட்ட வங்கி வாடிக்கையாளர்கள் சங்கத்தைச் சேர்ந்த தலைவர், செயலாளர், பொருளாளர், மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்கள் அனைவரையும் நாளை திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு சாவகச்சேரி பஸ் நிலையத்திற்கு அருகாமையிலுள்ள தமிழீழ நிர்வாக சேவை அலுவலகத்திற்கு வருகை தருமாறு கோரப்பட்டுள்ளது. (இ)

## சந்திரிகா தலைமையில் அபிவிருத்தி சபை

கொழும்பு, டிச. 17

ஜனாதிபதி சந்திரிகா தலைமையில், தேசிய அபிவிருத்தி சபை ஒன்று அமைக்கப்படவிருக்கிறது.

நாட்டின் தேசிய அபிவிருத்திக் கொள்கையை வகுக்கும் முகமாக ஜனாதிபதி தலைமையில் இந்த சபை நிறுவப்படவிருக்கிறது. (இ-3)

## கூட்டுறவு ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சியில்

சாவகச்சேரி, டிச. 17

வன்னிக்கு இடம்பெயர்ந்துள்ள கூட்டுறவு அமைப்புக்களின் நலன்களை கவனிக்கும் நோக்குடன் கூட்டுறவு உதவி ஆணையாளர் ஆலுவலகம் ஒன்று கிளிநொச்சியில் இயங்க ஆரம்பித்துள்ளது.

வடபிராந்தியத்தில் உள்ள கூட்டுறவு அமைப்புக்களின் நலன்களைப் பேணும் வகையில் யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த அலுவலகத்தின் கிளை அலுவலகம் கிளிநொச்சியில் செயற்பட ஆரம்பித்துள்ளதாக வடமாகாண கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. தி. சபாரத்தினம் தெரிவித்தார்.

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து வன்னியில் தங்கியுள்ள கூட்டுறவு அமைப்புக்களின் அங்கத்தவர்களின் தேவைகள், அவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் குறித்து இந்த அலுவலகம் நடவடிக்கைகளை எடுக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

## தாண்டிக்குளத்தில் கெடுபிடி அதிகரிப்பு

வடபகுதி வரும் பயணிகள் மீதான படையினரின் கெடுபிடிகள் தாண்டிக்குளத்தில் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

சவர்க்காரம், படச்சுருள் ஆகிய வற்றைக் கொண்டு வரும் பயணிகளை படையினர் கண்டபடி தாக்குகின்றனர் என்றும் —

ஒருவர் ஒரு ஷேர்ட் ஒரு சாரம் மட்டுமே கொண்டு செல்லலாம் என்று படையினர் மிரட்டுகின்றனர் என்றும் —

ஒருவர் மூவாயிரம் ரூபாவுக்கு மேல் எடுத்துச் செல்ல படையினர் அனுமதிக்கிறார்கள் இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-36)

## கடலில் மிதந்த போத்தலின் பானம் யமனானது!

### வாகரையில் மூவர் பலி!!

கொழும்பு, டிச. 17

கடலில் மிதந்து வந்த போத்தலில் இருந்த பானத்தை சாராயம் என்று நினைத்து அருந்திய 15 பேரில் மூவர் இறந்தனர். 7 பேர் வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வாகரைப் பிரதேசத்தில் கடந்த புதன்கிழமை இச்சம்பவம் இடம் பெற்றது.

இவர்கள் அருந்திய பானம் ஒருவகை ''ஸ்பிரிட்'' ஆக இருக்கலாம் என வழைச்சேனை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். தட்சணாமூர்த்தி தெரிவித்தார்,

(இ)

## வேட்டைக்குப் பயன்படும் ஊர்காவலரின் துப்பாக்கி

கொழும்பு, டிச. 17

அனுராதபுரம் பொலீஸ் பிரிவில் உள்ள ஊர்காவல் படையினர் பலா தமது துப்பாக்கிகளை தனிப்பட்ட குரோதங்களைப் தீர்க்கவும்—

வேட்டைக்கும்—பயன் படுத்துகின்றனர் என்று 'ஐலண்ட்' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

ஊர்காவல் படையைச் சேர்ந்த ஒருவரிடம் இருந்து துப்பாக்கியை இரவலாக வாங்கிய ஒருவர் மற்றொரு ஊர்காவல் படையினருடன் வேட்டைக்குச் சென்றார் என்றும்—

மிருகம் ஒன்றுக்கு இவர் வைத்த வேட்டு தவறுதலாக கூடவந்த ஊர்காவல் படையினருக்குப் பட்டு அவர் அதே இடத்தில் மரணமானார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மற்றும் அனுராதபுரம் மாவட்டத்தில் சமீபத்தில் இடப்பெற்ற வெவ்வேறு இரு சம்பவங்களில் ஊர்காவல் படையினர் இருவரைச் சுட்டுக் கொன்றுள்ளனர்.

பதவியாவில் ஊர்காவற் படையினர் ஒருவர் தன்னிடம் இருந்த 'ரி-56' ரக துப்பாக்கியினால் ... ஒன்றைச் சுட்டுக் கொன்ற சம்பவமும் இடம்பெற்றுள்ளது.

(இ)


UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.

ANNUAL EXAMINATIONS

The following examinations will be conducted commencing from the date given below:-

1. Third MBBS Part II (Repeat) Examination - 8th January 1996
2. Final MBBS Examination and Final BSMS Examination - 29th January 1996.
3. Special Degree Examination in Science 1994 (Third and Fourth Years) - 19th February 1996.
4. Third Examination in Science 1994 - 19th February 1996.
5. Special Degree Examination in Arts 1994 (Final) - 19th February 1996.
6. General Degree Examination in Arts 1994 (Final) - 19th February 1996.
7. Diploma in Carnatic Music / Violin/Veena/ Miruthangam - 19th February 1996.
8. Diploma in Bharathanatiyam - 19th February 1996.
9. Postgraduate Diploma in Education (Full Time) - 19th February 1996.
10. Postgraduate Diploma in Education Part Time Part I & II - 19th February 1996.
11. Bachelor of Commerce Part III (1994) - 19th February 1996.
12. Bachelor of Business Administration Part III (1994) - 19th February 1996.

Those who are eligible to sit for the MBBS and BSMS Examinations are requested to submit their applications on or before 1st January 1996 and others are requested to submit their applications on or before 20th January 1996 at one of the following places giving their names, registration numbers and the subjects and units for which they are appearing:

i. University of Jaffna Sub - office, Hindu College, Chavakachcheri.
ii. Faculty of Agriculture, University of Jaffna, Kilinechchi.

Vice - Chancellor
1995.12.15

(C/3149)



## 8 ஆம் நாள் நினைவஞ்சலி

### மேரி கிறேஸ் கிறிஸ்ரோபர்

(இல. 5 சென் பற்றிக்ஸ் றோட், யாழ்ப்பாணம்)

மேரி கிறேஸ் கிறிஸ்ரோபர் 11-12-1995) திங்கட்கிழமை நித்தியவாழ்வு பெற்றார்.

இவர் முன்னாள் யா/புனித வளன் அச்சகபோமன் B. A. கிறிஸ்ரோபரின் அன்பு மனைவியும், மிருசுவில் திருமதி லில்லி பாக்கியநாதனின் அருமை அக்காவும், திருமதி E. M. மரியாம்பிள்ளை, திருமதி I. L. புவனேந்திரன், E. T. செல்வராஜா, B. ஆனந்தராஜா, P. தியாகராஜா, P, பவளராஜா, காலஞ்சென்றவர்களான இசபெலா, மறிஸ்ரெலா, A. அழகராஜா, J ஜுட் ஜோராஜா ஆகியோரின் நேசத் தாயுமாவார்.

இவரது ஆன்மாவுக்கு இறையமைதி வேண்டி 18-12-1995 திங்கள் பி. ப. 4 மணிக்கு மிருசுவில் கன்னியர்மட (Convent) சிற்றாலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்படும். உறவினர், இவரில் அன்புடையோர் அனைவரையும் பங்குபற்றும்படி அழைக்கிறோம்.

இவரது வாழ்வின் இறுதிக் காலத்தில், இடர்கள் நடுவிலும் நேசித்து, அரவணைத்து ஆன்மசரீர தேவைகளை நிறைவேற்றி வழியனுப்பிய திருச்சிலுவைக் கன்னியர் சபை, கொழும்புத்துறை முதியோர் இல்லத் தலைவி Rev. Sr. Iniga வுக்கும் அந்த இல்லத்தின் அருட்செல்வியர்க்கும், பங்குபற்றிய - உதவி நல்கிய அருட் தந்தையர்கட்கும் உளமார்ந்த நன்றி கூறும்,

Sr. M. மறீனா Holy Cross
Bro. M. T. சரத்ஜீவன்
புனித சவேரியார் குருமடம்,
C. மங்களநாயகி மரியாம்பிள்ளை

'வீலாபதி',
மிருசுவில்.

(39639)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உதயன்

## இவர்கள் பிரதிநிதிகளா?

சந்திரிகா அரசாங்கத்தின் அடுத்த வருடத்துக்கான வரவு - செலவுத் திட்டம் எவ்வித தங்கு தடையுமின்றி நிறைவேற்றப்பட்டு விட்டது. அதன் மூன்றாவது மதிப்பீடு நாற்பத்தேழு அதிகப்படி வாக்குகளால் நிறைவேற்றப் பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் நான்கு தமிழ்க் கட்சிகளும் அரசாங்கத்தை ஆதரித்து வாக்களித்தன.

இத்தனைக்கும் வரவு-செலவுத் திட்டத்தில், அரசாங்கத்தின் அடுத்த வருடத்துக்கான மொத்த செலவினத்தில், 35 சத வீதம் பாதுகாப்புச் செலவுகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் பாதுகாப்புச் செலவு என்பது என்ன...? எதற்காக? வடக்கு -கிழக்கில் போரை நடத்தி, விடுதலைப் புலிகளை ஒழிப்பதாகக் கூறிக்கொண்டு, தமிழ் மக்களை அழிப்பதற்காக; அவர்களின் உடைமைகளை நாசப்படுத்துவதற்காகவே கோடிக்கணக்கில் அரசு பணத்தைக் கரியாக்குகிறது.

இந்த விளக்கம் எட்டாம் ஆண்டு மாணவனுக்கும் இப்போது தெரிந்த விடயம். அப்படியிருக்க, தாங்களும் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று தாமே முத்திரை குத்தியுள்ள, நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்ப் பிரகிருதிகள் சந்திரிகாவின் வரவு - செலவுத் திட்டத்தை ஆதரித்துக் கை உயர்த்தி உள்ளார்கள்!

பாதுகாப்பு நிதி தமிழ் மக்களைக் கொல்வதற்குத் தான் என்பதனை நன்றாகத் தெரிந்துகொண்டும், வரவு - செலவு திட்டத்தை ஆதரித்த இவர்கள் தங்களைத் தமிழர் பிரதிநிதிகள் என்று சொல்வதற்கு வெட்கமில்லை...?

கடந்த திங்கட்கிழமைதான் இவர்கள் சந்திரிகாவைச் சந்தித்து வடக்கு - கிழக்கில் நடத்தும் போரை நிறுத்துமாறு கேட்டிருந்தார்கள். ஆனால் சந்திரிகா அதனை நிராகரித்துவிட்டார். இவர்கள் மூக்குடைபட்டு வந்தார்கள்!

அதற்குப் பின்னராவது, தமது நாடாளுமன்ற பலத்தை வைத்து அம்மையாருக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேண்டும் என்ற ரோசம் வன்மம் பிறக்கவில்லையே இவர்களுக்கு...!

சூடு, சொரணை சிறிதளவேனும் இவர்களுக்கு இருந்திருப்பின், தங்களிடமும் வாக்குப் பலம் உண்டு என்பதனைச் சமிக்ஞை காட்டுவதற்கேனும், அடையாளத்திற்கேனும் வரவு - செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களித்திருப்பார்கள்.

தங்கள் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளுக்கு, தமது சொகுசு வாழ்க்கைக்கு எந்த விதத்திலும் பாதிப்பு ஏற்படாமலே செய்திருக்கக் கூடிய கைங்கரியத்தை இயற்றாதுள்ள இவர்களை இனியும் தமிழ் எம்.பிக்கள் என்று கணக்கெடுக்கக் கூடாது!

சந்திரிகாவின் அடிவருடிகளான இவர்களை பொது மக்கள் ஐக்கிய முன்னணி எம்பிக்களாகவே இனிமேல் கணிக்க வேண்டும்.

ஏற்கனவே நாம் இப்பத்தியில் குறிப்பிட்டது போல, போருக்கு எதிராக, தமிழர்கள் அழிக்கப்படுவதற்கு எதிராக தமது எம். பி. பதவிகளை இவ்வேளையில் துறந்திருக்க வேண்டிய இவர்களை - தமிழர் துரோகிகளும், காட்டிக் கொடுக்கும் காக்கை வன்னியர்களும் என்று வர்ணிக்காமல் வேறு எப்படி அழைப்பது...?

# மாஹோ, ஹபரண நாளை வந்து சேரும்

சாவகச்சேரி, டிச. 17

யாழ் மாவட்டத்துக்குரிய இரண்டு மாதக்கோட்டாவான 5 ஆயிரம் பரல் மண்எண்ணெய் மற்றும் ஆயிரம் மெற்றிக் தொன் உலர் உணவுப் பொருள்கள் ஆகியவற்றுடன் 'மாஹோ' கப்பலும் —

ஒரு தொகுதி மாவுடன் 'ஹபரண' கப்பலும் — நாளை பருத்தித்துறைக்கு வந்து சேரும் எனத் தெரிவிக்கப்பட்டது.

கப்பல்களில் இருந்து பொருள் இறக்கும் வேலைகள் உடன் ஆரம்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

யாழ். போதனா வைத்தியசாலைக்கான மருந்துப் பொருள்களும் ''ஹபரண'' கப்பலில் எடுத்துவரப் படுவதாகத் தெரிய வந்தது.

(உ-3-173)

# 309 தபால் பொதிகள் கப்பலில் வந்தன

சாவகச்சேரி, டிச. 17

இடம் பெயர்ந்தோருக்கான நிவாரணப் பொருள்களுடன் 'லங்கா முடித' கப்பல் நேற்று பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்தது.

இக்கப்பலில் எடுத்து வரப்பட்ட 309 தபால் பொதிகள் மட்டும் நேற்று இறக்கப்பட்டன.

'லங்கா கல்யாணி' கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கப்படுவதால் இக்கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் பணி ஓரிரு நாட்கள் செல்லும் எனத்தெரிவிக்கப்பட்டது.

இக் கப்பலில் ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி, ஆயிரம் மெற்றிக் தொன் மா, 200 மெற்றிக் தொன் பருப்பு, 200 மெற்றிக் தொன் சீனி, 50 மெற்றிக் தொன் பால்மா ஆகியன எடுத்து வரப்பட்டுள்ளன.

(உ-3-15-173)

## வல்லையில் தாக்குதல்

சாவகச்சேரி, டிச. 17

வல்லைப்பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மீது நேற்று முன்தினம் விடுதலைப்புலிகள் தாக்குதல் ஒன்றை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத்தாக்குதல் பற்றிய மேலதிக தகவல்கள் இச்செய்தி அச்சுக்குப்போகும் வரை கிடைக்கவில்லை.

(உ-3)

### தமிழருக்கு விடிவு வேண்டி

# ஞாயிறன்று ஒரே நேரத்தில் இந்துஆலயங்களில் வழிபாடு

## குருமார் ஒன்றியம் ஏற்பாடு

சாவகச்சேரி, டிச. 17

இன்னலுறும் தமிழ் மக்களின் விடிவுக்காக எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஒரே நேரத்தில் இந்து ஆலயங்களில் இறைவழிபாடு ஒன்றினை நடத்த இந்துமத குருமார்கள் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ளது.

''சூரியப் பிரகாசம்'' இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்து பல்வேறு வகைகளிலும் இன்னலுறும் தமிழரின் விடிவுக்காகவும் —

அனைத்துத் தமிழ் மக்களின் சுதந்திர வாழ்வியலுக்காகவும் —

இந்து மத குருமார்கள் ஒன்றிணைந்து எல்லா ஆலயங்களிலும் இறைவழிபாட்டை மேற்கொள்ள ஏற்பாடு செய்துள்ளனர்.

[உ-3]

### முகாம்களில் உள்ள

# ஒவ்வொரு 1,000 பேரில் 10 பேருக்கு வயிற்றோட்டம்

சாவகச்சேரி, டிச. 17

வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் இடம்பெயர்ந்தோர் முகாம்களில் பரவிவரும் நோய்கள் பற்றிய ஆய்வினை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் இணைந்து மேற்கொண்டது.

இந்த ஆய்வு வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் 107 முகாம்களில் உள்ள 24 ஆயிரத்து 45 பேரில் மேற்கொள்ளப்பட்டது.

இதன்படி ஒவ்வொரு ஆயிரம் பேரிலும் 10.3 சத வீதமானவர்கள் நீர் வயிற்றோட்டத்தினாலும்—

0.9 சத வீதமானவர்கள் குருதி வயிற்றோட்டத்தினாலும் —

1.2 சத வீதமானவர்கள் மலேரியாவினாலும் —

5.7 சத வீதமானவர்கள் இருமல் மற்றும் காய்ச்சலினாலும் — பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு நோய்த்தாக்கத்துக்கு உட்பட்டவர்களில் 3.7 சதவீதமானோர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர். 1 5 சதவீதமானோர் மரணமடைந்துள்ளனர்.

(இ-7)

# ப. நோ. கூ. சங்கங்கள் பெரும் நிதி நெருக்கடியில்

வலிகாமத்தில் இருந்து இடம் பெயர்ந்துள்ள ப.நோ. கூ. சங்கங்கள் பெரும் நிதி நெருக்கடியில் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

உணவு முத்திரை விநியோகத்தில் சங்கங்களுக்கு கிடைக்க வேண்டிய பல கோடி ரூபா பணத்தை செயலகம் வழங்காததாலும் —

கொழும்பில் இருந்து பொருள்களை எடுத்து வருவதற்குத் தேவையான மொத்தப் பணம் ப. நோ. கூ. சங்கங்களில் இல்லாததால் பொருள்களை எடுத்து வர முடியாதுள்ளதாலும்—

இடம் பெயர்ந்த காரணத்தால் வீணான செலவீனங்கள் ஏற்பட்டதாலும்—

சங்கங்களில் பல கிளைகள் மூடப்பட்டதாலும்—

வங்கிகளில் இருந்து வசதிகள் பெறமுடியாததாலும்—

ப.நோ.கூ. சங்கங்கள் பெரும் நிதி நெருக்கடி நிலையில் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

# அரசியல் தீர்வை பின்னே தள்ளுகிறார் சந்திரிகா!

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினால், விடுதலைப் புலிகளைத் தோற்கடித்து விட்டதாகச் சிங்கள மக்களுக்குக் காட்டி ஆதரவைப் பெறமுடியும்—

இவ்வாறு அமைச்சர் அனுருத்த கூறிய ஆலோசனையைக் கேட்டுத்தான் சந்திரிகா யாழ்ப்பாணம் மீதான தாக்குதலுக்குப் பச்சைக்கொடி காட்டினார் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

இப்போது இராணுவம் யாழ்ப்பாணத்தைப் பிடித்தாயிற்று. யாழ்ப்பாண நகரத்தில் சிங்கக் கொடியை ஏற்றியாயிற்று. அதன் மூலம் யாழ்ப்பாணத்தை வீழ்த்தியதாகக் காட்டியாயிற்று. தமிழர்களை வென்றதாகக் காட்டியாயிற்று. அதனை அரசாங்க மட்டத்தில் கொண்டாடியும் ஆயிற்று.

இனிமேல் அரசாங்கம் என்னசெய்யப் போகிறது?

யாழ்ப்பாணத்தில் தனது நிர்வாகத்தை நடத்த வேண்டும் என்பது அரசாங்கத்தின் ஆசை. அந்த ஆசையை நிறைவேற்றுவதற்கு, இலக்கை அடைவதற்கு வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்தோர்களை திரும்ப அழைப்பதற்கு நிறைய ஆசை வார்த்தைகள் பேசவேண்டி உள்ளது.

ஆசை வார்த்தைகளை நம்பி யாழ்ப்பாண மக்கள் திரும்பப் போவதில்லை. ஸ்ரீலங்கா இராணுவத்தின் அடாவடித் தனங்கள், கொடுமைகளை அனுபவித்தவர்கள் அவர்கள்.

ஆகையால் அடுத்தபடியாக அரசாங்கத்துக்கு உள்ள அதிகாரத்தையும், சக்தியையும் பயன்படுத்தி இடம் பெயர்ந்த வலிகாமம் மக்கள் மீது அழுத்தங்களையும், நெருக்குதல்களையும் போட்டு பெரும் நெருக்கடிக்கு ஆளாக்கச் சந்திரிகா திட்டமிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தப் போவதாகச் சந்திரிகா கூறுவது, இராணுவ நிர்வாகத்தை — இந்திய இராணுவ காலத்தில் இருந்தது போன்ற ஒரு நிர்வாகத்தை — உருவாக்குவதனைத் தான்!

ஸ்ரீலங்கா இராணுவத்தின் முதலாவது பிரிகேட் தலைமை அலுவலகம் யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்பட்டிருப்பது அதற்கான அறிகுறியே.

அனேகமாக இந்த மாதத்தையும், அடுத்த ஜனவரியையும் இராணுவச் சிவில் நிர்வாகத்தை உருவாக்குவதற்கான தந்திரங்களையும், உத்திகளையும் பரீட்சித்துப் பார்ப்பதில் சந்திரிகா காலத்தைக் கழிப்பார் என்று எதிர்பார்க்கலாம்.

### மீண்டும் இராணுவ நடவடிக்கை

தனது தந்திரோபாயங்களும, திட்டங்களும் வெற்றி அளிக்கவில்லை எனக் கண்டதும் வடக்கில் இராணுவ நடவடிக்கைகளை அரசு மீண்டும் தொடங்கும் எனவும் எதிர்பார்க்கலாம்.

சிவில் நிர்வாகத்தை உருவாக்குவதற்கு அடுத்தபடியாக அல்லது இரண்டாவது கட்டமாக தமது அதிகாரப் பரவல் யோசனையை நடைமுறைப்படுத்தப் போவதாகவும்—

மூன்றாம் கட்டமாக வடக்கை புனர்நிர்மாணம் செய்து, கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவிட்டு அபிவிருத்தி செய்யப்போவதாகவும்— சந்திரிகா அறிவித்துள்ளார்.

அவரது திட்டத்தின் முதலாவது கட்டம் வெற்றி அளிக்காவிடில், இரண்டாம், மூன்றாம் கட்டங்கள் எல்லாம் அம்போ தான் !

புனர்நிர்மாணம், அபிவிருத்தி என்ற மூன்றாவது கட்டத்தைச் சந்திரிகா அரசு சிலவேளை தொட்டுக்காட்டலாம். அவ்வாறு தொடுவதின் மூலம் வெளிநாட்டு உதவிகளைப் பெறலாம் என்பதால் இரண்டாவது கட்டத்தைத் தாண்டி மூன்றாவதற்குப் போகலாம்.

ஆனால் மக்கள் இல்லாத பகுதியில் அபிவிருத்தி வேலைகளுக்குப் பணம் வழங்குவதற்கு வெளிநாடுகள் ஏமாந்த சோணகிரிகளாக இருக்கமாட்டா என்று நம்பலாம்.

அது ஒருபுறமிருக்க—

இரண்டாம் கட்டமான அதிகாரப்பரவல் யோசனையை அமுல்செய்வது என்பது வெறும் பொய்ப் பேச்சாகவே இருக்கும். அது நடைமுறைக்கு வருவது முழுக்க முழுக்கச் சந்தேகமானது என்பதனையே அரசியல் சூழ்நிலைகள் காட்டுகின்றன.

## சதுரங்கம் — சாணன்

அதற்கு நிறையக் காரணங்கள் உண்டு.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தமது அதிகாரப் பரவல் யோசனையை இவ்வருடம் ஓகஸ்ட் மாதம் மூன்றாம் திகதி உத்தியோகபூர்வமாக வெளியிட்டிருந்தார்.

இந்த யோசனைகளுக்கு மல்வத்த, அஸ்கிரிய பீடாதிபதிகள் உட்பட பௌத்த குருமார் பலத்த எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

சிங்களத் தீவிரவாதிகள், பேரினவாத இயக்கங்கள், சிங்களப் புத்திஜீவிகள் வட்டாரங்கள் என்பனவும் சந்திரிகாவின் அரசியல் அதிகாரப் பரவல் யோசனைகளை வன்மையாக எதிர்த்தன; கண்டித்தன.

யாழ்ப்பாணத்திற்கு அரசாங்கப் படைகள் முன்னேறி வந்து சிங்கக் கொடியை ஏற்றியபோது, தமிழர்களை வெற்றி கொண்டு விட்டதாக அந்தப் பேரினவாதச் சக்திகள் குதூகலித்தன. சிலர் அரசாங்கத்தைப் பாராட்டவும் செய்தனர். தாம் விரும்பிய இராணுவத் தீர்வை சந்திரிகா தெரிவு செய்துள்ளதால் அவரை ஆதரிக்கும் மனோநிலையில் இருந்தனர்.

ஆனால் சந்திரிகா தனது அதிகாரப் பரவல் யோசனையை நடைமுறைக்குக் கொண்டுவர முனைந்தால், அவை நிச்சயமாக மீண்டும் கிளர்ந்தெழும், எந்தவிதப்பட்டும் அதனைத் தடுக்க முனையும் என்பது நிச்சயம் என்று கொழும்பில் அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை தமிழர்களின் ஆதரவையும் நம்பிக்கையையும் சந்திரிகா பெரிதும் இழந்துள்ளார் என்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் நடத்திய ''ரிவிரச'' இராணுவ நடவடிக்கையால் உண்டான உயிர், உடைமை அழிவுகளால் அரசாங்கத்தையும் படைகளையும் தமது எதிரிகளாக யாழ்ப்பாண மக்கள் பார்க்கின்றனர்.

யாழ்ப்பாணத்தைத் துவம்சம் செய்து, ஈழத் தமிழர்களின் நாகரிகச் சின்னத்தை அழித்து, அங்கு சிங்கக் கொடியை ஏற்றியதை எல்லாத் தமிழர்களுமே, அவர்கள் எங்கிருந்தாலும், வெறுக்கின்றனர். அதனால் தமக்கு அவமானம் ஏற்

6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரஜனி கைவிட்டுவிட்டதால்

# வீரப்பன் தனிக்கட்சி தொடங்கினார்!

சென்னை, டிச. 17

அ.தி.மு.கவிலிருந்தும் தமிழக அமைச்சரவையிலிருந்தும் வெளியேற்றப்பட்ட ஆர்.எம். வீரப்பன், ''எம். ஜி. ஆர். முன்னணி'' என்ற புதிய கட்சி ஒன்றை ஆரம்பித்திருக்கின்றார்.

முன்னாள் அமைச்சர் திருநாவுக்கரசு தலைமையிலான எம்.ஜி.ஆர். அ.தி.மு.கவும், முன்னாள் அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் தலைமையிலான மக்கள் நலன் உரிமைக் கழகமும் தமது முன்னணியில் இணையும் என்றும் —

காங்கிரஸுடன் தமது முன்னணி கூட்டணி வைத்துக் கொள்ளும் என்றும் —

வீரப்பன் தெரிவித்துள்ளார்.

நடிகர் ரஜனிகாந்த் ஆரம்பிக்கவிருக்கும் புதிய கட்சியில் வீரப்பன் முக்கிய பிரமுகராக இருப்பார் என முன்னர் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் புதியகட்சி ஒன்றை தொடங்கும் எண்ணம் தமக்கு இப்போதைக்கு இல்லை என்று ரஜனிகாந்த் அண்மையில் திட்டவட்டமாக அறிவித்தது தெரிந்ததே.

(உ-3)

## மரணஅறிவித்தல்கள்

### காசிநாதன் தர்மலிங்கம்

பொலிகண்டியைப் பிறப்பிடமாகவும், மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட காசிநாதன் தர்மலிங்கம் 16-12-95 காலமாகி விட்டார்.

அன்னார் பகவதி (ஓய்வு பெற்ற ஆயுர்வேத மருத்துவர்) அவர்களின் அன்புக் கணவரும், துகிதா, அங்கசன் ஆகியோரின் அருமைத் தகப்பனாரும், சிவலிங்கம், திருமதி ச. பவானி, சகுந்தலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 16-12-95 சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:
திருமதி த. பகவதி
(மனைவி)

மட்டுவில் தெற்கு.
சாவகச்சேரி.

(39535)

திருமதி

### இராசேந்திரம் வியாழம்மா

நீர்வேலியை பிறப்பிடமாகக் கொண்ட இ. வியாழம்மா 16-12-95 காலமானனர், இவர் இராசேந்திரத்தின் அன்பு மனைவியும், இ. விஜயராஜா (C.E.B), இ. தாமோதரம்பிள்ளை, இ. மாணிக்கவாசகர், இ. சின்னராசா, இ. சந்நிதி (C. E. B), இ. செல்வராசா, இ. சிவராஜா, பூ. கனகமுத்து, து. பவளரத்தினம், பா. பத்மாதேவி, லோ. மல்லிகாதேவி, இ. குணவதி, இ தசபஞ்சாட்சரி, காலஞ்சென்ற ஜெ. தசபாரி ஆகியோரின் அன்புத்தாயாரும் ஆவார்.

அன்னாரது தற்காலிக இல்லத்தில் (17 - 12 - 95) இன்று 10.00 மணியளவில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் நுணாவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
இ. சந்நிதி
(மகன்)

தற்காலிக முகவரி:
செ. அருளம்பலம்
(தேனீர்கடை சின்னத்துரை)
190 ஆம் கட்டை,
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

(39536)

### சிவகுரு கந்தையா அழகரத்தினம்

(கோண்டாவில்மேற்கு, நெட்டிலிப்பாய்)

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் தற்போது மீசாலையில் வசித்தவருமான சிவகுரு கந்தையா அழகரத்தினம் இன்று (16-12-95) சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில் காலமானார்.

இவர் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், விக்கினேஸ்வரன், ரவிச்சந்திரன் (ஜேர்மனி), இலக்கணகுமார் (டுபாய்), திருநாவுக்கரசு ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற செல்லமுத்து [சிவபாக்கியம்], காலஞ்சென்ற கனகலிங்கம் மற்றும் தங்கம்மா, அன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 17-12-95 அன்று பகல் 12மணியளவில் மீசாலையில் நடைபெறும். இல்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

தற்போதைய முகவரி:-
இ. கிருஷ்ணமூர்த்தி,
ஜயா கடையடி ஒழுங்கை,
சாவகச்சேரி வடக்கு, மீசாலை.

(39537)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 17-12-95 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஈழத் தமிழர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கோள்காட்டி செய்தி ஏஜென்ஸிகள் சில தகவல் வெளியிட்டிருக்கின்றன.

மலையகத் தொழிலாளர் சகிப்பின் விளிம்பிற்கே வந்துவிட்டனர் என்று தெரிவித்த இ.தொ.கா. தலைவர் எஸ். தொண்டமான், மலையகத் தமிழர்களின் உரிமைகள் குறித்து அரசு உரிய கரிசனை காட்டி நடவடிக்கை எடுக்க வேண்டிய காலம் வந்துவிட்டது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

''மலையக மக்கள் தற்போதைய அரசியல் நீரோட்டத்தில் இணைக்கப்படாவிட்டால் வடக்கு - கிழக்கு தமிழ் மக்களைப் போன்றே அவர்களும் தங்கள் உரிமைகளை வென்றெடுக்க தீவிரப் போராட்டத்தை மேற்கொள்ளும் நிலை வரும் — என்றும் அவர் எச்சரித்தார்.

இலங்கையில் 17 வீதமானோர் தமிழர்கள். அவர்களில் 8 லட்சத்து 25 ஆயிரம் பேர் மலையகத் தமிழர்களாவர்.

இவர்கள் தாங்கள் தனித்துவமான கலாசாரப் பின்னணி கொண்டவர்கள் எனக் கருதுவதால் இதுவரை வடக்கு-கிழக்கு தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தில் இணைந்து கொள்ளவில்லை.

''பொருளாதார நலன்கள் எதனையும் இதுவரை அனுபவிக்காத மலையகத் தமிழர்கள் மலையகத்திலேயே பிறந்து, அங்கேயே தொழில் செய்து, அங்கேயே மடிகின்றனர். ஆனால் மலையக மக்களின் இளைய தலைமுறை, வடக்கு - கிழக்கு மக்களின் விடுதலைப் போராட்டத்தை உணர்ந்துள்ளதாலும் மனித உரிமைகள் குறித்து விழிப்புணர்வு பெற்றுவருவதாலும், மலையக மக்களுக்குரிய உரிமைகள் வழங்கப்படாவிட்டால் எதிர்காலத்தில் இலங்கை மேலும் பல பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டி நேரிடும். — என்று யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் கா. சிவத்தம்பி தெரிவித்திருக்கின்றார்.

கிழக்கில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிற்கு அனுப்பியதும் —

இதனால் கிழக்கின் பெரும் பகுதி புலிகளின் கைகளில் வீழ்ந்ததும் தெரிந்ததே.

கிழக்கில் முக்கிய நகரப் பகுதிகள் சில படையினரின் கட்டுப்பாட்டில் இருந்தாலும் அங்கு பெரும்பாலான பிரதேசம் புலிகள் வசமே இருப்பதாக இராணுவச் செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கிழக்கில் தனது அதிகாரத்தை ஸ்ரீலங்கா அரசு மெல்ல மெல்ல இழந்து வருவதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். [உ-6]

தனக்குத்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவு காட்டும் வகையில் — அனைவரும் பகிஷ்கரிக்க வேண்டும் என்று எழுதி வைத்துவிட்டு, மண்எண்ணெய் ஊற்றி தன்னைத் தானே எரித்துக் கொண்டார் அந்த இளைஞன்.

தான் எந்தக் கட்சியையும் சாராதவன் என்று தமது மரண வாக்குமூலத்தில் அந்த இளைஞர் தெரிவித்தார்.

இறப்பதற்கு முன் ''இன்று நான்; நாளை தமிழகம்''— என்று அவர் கூறியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(உ-3-7)

பொருட்கள்...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுக்கப்பட்டுள்ளதாக புனர்வாழ்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

'உ' பங்கீட்டு அட்டை வைத்திருப்போர் பணம் செலுத்தியே — பங்கீட்டு அடிப்படையில் — இப்பொருட்களைப் பெறுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆஸ்பத்திரி ஊழியருக்கு போக்குவரத்து வசதி

வலிகாமத்திலிருந்து இடம்பெயர்ந்த பின்னர் சாவகச்சேரி மற்றும் ஆஸ்பத்திரிகளில் கடமைக்குச் சமுகம் தந்துகொண்டிருக்கும் யாழ். ஆஸ்பத்திரி ஊழியர்களுக்கு—

தற்போது மந்திகையில் இயங்கும் யாழ். போதனா ஆஸ்பத்திரிக்கு அவர்கள் கடமைக்கு சமுகம் கொடுப்பதற்கு ஏதுவாக போக்குவரத்து வசதி வழங்கப்படவிருக்கின்றது.

நேற்று யாழ். ஆஸ்பத்திரி பணிப்பாளருக்கும் ஊழியர்களுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இதுபற்றித் தீர்மானிக்கப்பட்டது.

இதன்படி —

சாவகச்சேரி, மந்திகை ஆஸ்பத்திரிகளுக்கு இடையில் ஊழியருக்கு போக்குவரத்து வசதி வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(உ-13-3)

## பனஞ்சீனி தொழிற்சாலை கண்டாவளையில் இயங்கும்

சாவகச்சேரி, டிச. 17

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கண்டாவளை பனஞ்சீனித் தொழிற்சாலை முழுமையாக இயங்க வைக்கப்பட உள்ளது.

இந்தத் தொழிற்சாலை தொழிலாளர் பற்றாக்குறை மற்றும் தொழில்நுட்ப வசதியின்மை காரணமாக மந்தமாகவே செயற்பட்டு வந்தது.

தற்சமயம் வலிகாமப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த தொழிலாளர்களையும் தொழில்நுட்ப வளங்களையும் வன்னிப்பகுதிக்கு இடம் மாற்றுவதன் மூலம் கண்டாவளை பனஞ் சீனித் தொழிற்சாலையை முழுமையாக இயங்க வைக்க முடியும் என்று பனை, தென்னைவளக் கூட்டுறவுச்சங்க ஆணையாளர் திரு. தி. சபாரத்தினம் தெரிவித்தார்.

அந்தத் தொழிற்சாலையிலிருந்து பனஞ்சீனி, பனம் வெல்லம் என்பன உற்பத்தி செய்து, வன்னிப்பகுதியில் அதிகரித்துள்ள பாவனையாளர்களின் தேவைகள் நிறைவேற்றமுடியும் என்றும் அவர் சொன்னார். (உ-7)

சென்னையில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மிடங்களுக்கும், வீரர்களுக்கும் பாதுகாப்பு வழங்குவதில் 2 ஆயிரம் பொலீஸாரும் —

ஈடுபடுத்தப் படவிருக்கின்றனர் என்று தே[illegible]ம் தெரிவித்தார்.

விளையாட்டைப் பார்க்க வரும் பார்வையாளர்கள் பை மற்றும் பார்சல்களை மைதானத்துக்குள் கொண்டு செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

இதேவேளை —

இப்போட்டியில் பங்குபற்றும் இலங்கைக் குழுவின் 35 பேர்களைக் கொண்ட முதலாவது அணி நேற்று சென்னைக்குச் சென்றது என இலங்கை அறிவித்தது.

செல்வி ஜெயலலிதா தலைமையிலான தமிழக அரசு இந்தியப் பணத்தில் இருநூறு கோடி ரூபா செலவில் இந்த விளையாட்டுப் போட்டிகளை நடத்துகின்றது. (உ-3)

புதிதாக...

(1 ஆம் யக்கத் தொடர்ச்சி)

யில் 15 ஆயிரத்துக்கும் அதிகமான இளைஞர்கள் பெரும் உற்சாகத்துடன் கலந்து கொண்டனர் என்றும்—

அவர்களில் 11 ஆயிரத்து 500 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்றும் —

இவர்கள் அனைவரும் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர் என்றும்—

அதன் பின்னர் வெற்றிடங்களுக்கு ஏற்ப நியமனங்கள் வழங்கப்படும் என்றும் —

மேஜர் ஜெனரல் குலதுங்க தெரிவித்தார்.

புதிதாகத் தெரிவு செய்யப்படுவோருக்கான எட்டு வார பயிற்சி எதிர்வரும் 27 ஆம் திகதியன்று ஆரம்பமாகும் என்றும் அவர் சொன்னார்.

(உ-9)

## அரசியல் தீர்வை...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுவிட்டதாக மனவேதனை அடைந்துள்ளனர்.

இரு தரப்பு எதிர்ப்பு

இந்த நிலையில், சந்திரிகா தமது தீர்வு யோசனைக்கு இருதரப்புகளிலிருந்தும்எதிர்ப்பைத்தேடிக் கொள்வார் என்று கணிக்கப்படுகிறது.

இத்தகைய சூழ்நிலையில், வாயளவில் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் நிலைப்பாட்டில் எவ்விதமாற்றமும் இல்லை என்று கூறிவரும் சந்திரிகா —

செயலளவில் அதனைப் பின்னுக்குத் தள்ளிப்போடுவதில் கவனம் செலுத்துகிறார்.

தமது அதிகாரப்பரவல் யோசனை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படும் என்றும் —

அந்தக்குழு வழங்கும் திட்டமே இறுதியானதாக இருக்கும் என்றும், அதற்கே சட்ட வடிவம் கொடுக்கப்படும் என்றும் — யாழ்ப்பாண ''வெற்றி''யைத் தொடர்ந்து நடத்தப்பட்ட பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்திருக்கிறார்.

அது மட்டுமல்ல.

கொழும்பில் உள்ள தமிழ்க் கட்சிகளைச் சந்தித்தபோது, அவர் கூறிய தகவல் அவரது அதிகாரப் பரவல் திட்டத்தின் மீது நம்பிக்கை கொண்டிருந்தவர்களுக்கு அதிர்ச்சியைக் கொடுத்திருக்கிறது.

அதிகார அலகு குறித்து முடிவு செய்யப்படும்போது நாட்டின் இறைமையையும், ஒற்றையாட்சி முறையையும் பேணுவதில் கவனம் செலுத்தப்படும் என்பதே அந்த அதிர்ச்சி தந்த தகவலாகும்!

இதற்கு பின்னரும் சந்திரிகாவின் அதிகாரப் பரவல் யோசனை யாருக்கு வேண்டும்?

ஓகஸ்டில் தீர்வு யோசனையை வெளியிட்டபோது அவர் கூறியதும் இப்போது கூறுவதும், வெறும் ''சுத்துமாத்துக்களே!''

அதிகாரப் பரவலின் அச்சாணி அதிகார அலகுதான். ஒற்றையாட்சியின் கீழ் நிர்வாகப் பரவல்தான் நடக்கமுடியும்.

ஓகஸ்டில் சந்திரிகா கூறிய பிராந்தியங்களின் ஒன்றியத்தில் மாற்றம் ஏற்படப்போகிறது. அவரின் அரசியல் தீர்வு யோசனையின் அச்சாணியே முறியப்போகிறது.

ஐக்கிய தேசியக் கட்சிக் காலத்தில் இயங்கிய மங்கள முனசிங்கா தெரிவுக்குழு செய்த சிபார்சுகளைப் போலவே சந்திரிகாவின் தீர்வு யோசனையும் முடியும்; அதனைப் போலவே பிசுபிசுத்துப் போகும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org